உண்மைகளை தெரிந்துகொள்ளுங்கள்:

# அவசர உடல்நல பராமரிப்பு தேவைப் படும்போது 911 ஐ அழைத்தல்

*தற்காலிக மற்றும் வெளிநாட்டு வேலையாட்களுக்கு*

அம்புலன்ஸ், போலீஸ் மற்றும் தீயணைப்புபடைத் தேவைகள் ஏற்படும்போது நீங்கள் அவசரமாக அழைக்க வேண்டிய இலவச தொலைபேசி இலக்கம் 911. ஒருவருடைய பாதுகாப்புக்கு அல்லது உடல்நிலைக்கு ஆபத்து ஏற்பட்டு அவர்களுக்கு உடனடி உதவி தேவைப்படுவதுதான் அவசர நிலையாகும்.

**பின்வரும் அறிகுறிகளுக்காக உங்களுக்கு அவசர உதவி தேவைப்படும்போது 911 ஐ அழையுங்கள்:**

- மயக்கம்
- வலி மருந்துகளால் குணமாகாத கடுமையான வலி
- குழப்பம், பேசுவதில் சிரமம், தலைச்சுற்று
- தொடர்ச்சியான கடும் நெஞ்சு வலி
- மூச்சுவிட சிரமம்ப்படுதல் அல்லது மூச்சுத் திணரல்
- வெடித்த அல்லது முறிந்த எலும்பு, தையல்போடப்படவேண்டிய காயம் அல்லது நிறுத்தமுடியாமல் இரத்தம் வெளியேறுதல்.
- திடீரெனத் தோன்றும் கடும் தலைவலி அல்லது பார்வைக்கோளாறுகள் அல்லது சடுதியான பலவீனம், விறைப்பு மற்றும் அல்லது முகத்தில், கையில் அல்லது காலில் கூச்சவிறைப்பு

**911 அனைவருக்கும் உரியது.** 911 பணியாளர்கள் அவசர நிலையைப் பற்றி மட்டுமே விசாரிப்பார்கள். தனிப்பட்ட உடல்நலத் தகவல்கள் அந்தரங்கமானது.

- *911 ஐ அழைப்பதற்கு உங்களுக்கு எந்த ஆவணமோ அல்லது அனுமதியோ தேவையில்லை.*
- *நீங்கள் உங்களுக்காகவோ அல்லது வேறு யாருக்காகவோ அழைக்கலாம்.*

ஸ்பானிஷ், பிலிப்பீனோ, தாய், வியட்னாம், மன்டரின், கன்டனீஸ், அரபிக், ஃப்ரெஞ்ச் மற்றும் வேறுமொழிகள் உட்பட 240 மொழிகளில் **24/7 நேரமும் உதவ மொழிபெயர்ப்பாளர்கள் தயார்.**

- *நீங்கள் 911 ஐ அழைத்து அம்புலன்ஸை அனுப்புபவருடன் தொடர்புகொண்டதும் என்ன மொழி பேசுவீர்கள் என்பதை சொல்லிவிட்டு தொடர்பிலேயே இருங்கள்.*

**அழைப்பு இலவசம்.** கனடாவில் தொலைபேசி சேவையைப் பெற்றிராத வேறு நாட்டு செல்போன்களைக் கூட அழைப்பதற்கு பயன் படுத்தலாம். வாட்ஸப், ஸ்கைப் அல்லது கூகிள் போன்ற சமூக ஊடக கருவிகள் (ஆப்ஸ்) 911 ஐ அழைக்க பயன்படாமல் போகலாம்.

- **எந்த ஒரு செல்ஃபோனில் அல்லது வீட்டுஃபோனிலிருந்தும் 911 ஐ அழைக்கலாம். சமூக ஊடக கருவிகளை பயன்படுத்த வேண்டாம்.**

உடல் நல ஆலோசனை அல்லது தகவல்களுக்கு, டெலிஹெல்த் ஒன்ராறியோவை 24/7 நேரமும் அழையுங்கள். அது இலவசமானது மற்றும் அந்தரங்கமானது. 1-866-797-0000
அல்லது டெலிப்ரின்டர் அல்லது டெலிடைப்ரைட்டர் (TTY): 1-866-797-0007

கோவிட்-19 பற்றிய தகவல்களுக்கு **ontario.ca/coronavirus** க்கு செல்லுங்கள்

வேலைத் தராதரங்கள் தகவல் நிலையம்: 1-800-531-5551
or TTY (செவிப்புலன் குறைந்தவர்களுக்கு): 1-866-567-8893

Ontario